# அமெரிக்காவிற்கு பிரதம மந்திரி வருகை (ஜூன் 25-26, 2017)

**ஜூன் 12, 2017**

அமெரிக்காவின் ஜனாதிபதி, கௌரவ டொனால்ட் ஜே. ட்ரம்ப் அவர்களின் அழைப்பின் பேரில் பிரதம மந்திரி நரேந்திர மோடி அவர்கள் ஜூன் 25 - 26, 2017 இல் வாஷிங்டன் டி.சி.க்கு வருகை செய்ய உள்ளார்.

பிரதம மந்திரி ஜூன் 26 ஆம் தேதி ஜனாதிபதி ட்ரம்ப் அவர்களுடன் உத்தியோகபூர்வ பேச்சுவார்த்தை நடத்த உள்ளார். இது இரு தலைவர்களுக்கிடையிலான முதல் சந்திப்பாக இருக்கும். அவர்களது விவாதங்கள், பரஸ்பர நலன் தொடர்பான ஆழமான இருதரப்பு ஈடுபாடுகளுக்கு ஒரு புதிய திசையை வழங்குவதுடன் மற்றும் இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையில் பல பரிமாண மூலோபாய பங்காளித்துவத்தை ஒருங்கிணைக்கவும் உதவும்.

**புது தில்லி**

**ஜூன் 12, 2017**